# வேலைநலன் துணை வருமானத் திட்ட மேம்பாடுகள்

2020 வேலை ஆண்டிலிருந்து, குறைவாக வருமானம் ஈட்டுகின்ற சிங்கப்பூரர் தொழிலாளர்களின் வருமானத்தையும் மத்திய சேமநிதி சேமிப்புகளையும் அதிகரிப்பதற்கு, மேலும் அவர்களைத் தொடர்ந்து வேலை செய்ய ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் வேலைநலன் துணை வருமானத் (WIS) திட்டத்தை மேம்படுத்த முடிவெடுத்துள்ளது.

## உயர் வருமான வரம்பு

தகுதிபெறுவதற்கான வருமான வரம்பு ஒரு மாதத்திற்கு $2,000 -இல் இருந்து $2,300-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.






## அதிக வழங்கீட்டுத் தொகைகள்

$4,000 வரை உயர் ஆண்டு வேலைநலன் துணை வருமான வழங்கீட்டுத் தொகைகள்



### அதிகபட்ச ஆண்டு WIS வழங்கீட்டுத் தொகை

| வயது | நீங்கள் வேலை செய்பவர் என்றால் | நீங்கள் சுயதொழில் புரிபவர் என்றால் |
|---|---|---|
| 35-44 | $1,700 | $1,133 |
| 45-54 | $2,500 | $1,667 |
| 55-59 | $3,300 | $2,200 |
| 60 மற்றும் அதற்கு மேல் | $4,000 | $2,667 |

35 வயதிற்குட்பட்ட உடற்குறையுள்ள நபர்கள் $1,700 வரை பெறுவார்கள்.

வேலைநலன் துணை வருமானத் திட்டம் குறித்து மேலும் தகவலுக்கு, cpf.gov.sg/wis-ஐ பார்வையிடுங்கள்

Workfare

# வேலைநலன் துணை வருமானத் திட்டம் பற்றிய ஓர் அறிமுகம்

2007-இல் அறிமுகப்படுத்தப்பட்ட வேலைநலன் துணை வருமானத் (WIS) திட்டமானது, தகுதிவாய்ந்த சிங்கப்பூரர் தொழிலாளர்கள் ஓய்வு காலத்திற்காகச் சேமிக்க உதவும் பொருட்டு அவர்களுக்கு மத்திய சேமநிதி நிரப்புத் தொகையையும், அவர்களின் துணை வருமானத்திற்காக ரொக்கத்தையும் வழங்குகிறது.

## வேலைநலன் துணை வருமானத் திட்டத்திற்கு யார் தகுதிபெறுகிறார்கள்?

### கீழ்க்கண்ட நபர்கள் தகுதிபெறுவார்கள்:



- சிங்கப்பூரர்;
- 35 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர் (எல்லா வயது உடற்குறையுள்ள நபர்களும் தகுதி பெறுவார்கள்); மற்றும்
- வேலை செய்த மாதத்திற்காக **$2,300 -க்கு மேற்படாத** சராசரியான மொத்த மாதாந்தர வருமானம் ஈட்டுபவர்

### இருப்பினும், கீழ்க்கண்ட நபர்கள் தகுதிபெற மாட்டார்கள்:



- $13,000 -க்கு மேல் ஆண்டு மதிப்பைக் கொண்ட ஒரு வீட்டில் வசிப்பவர்
- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொத்துக்களைச் சொந்தமாக வைத்திருப்பவர்; அல்லது

திருமணமாகி இருந்தால்:

- நீங்களும் உங்கள் வாழ்க்கைத்துணையும் சேர்ந்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொத்துக்களைச் சொந்தமாக வைத்திருந்தால்; அல்லது
- உங்கள் வாழ்க்கைத்துணையின் மதிப்பிடத்தக்க வருமானம் $70,000-ஐ தாண்டினால்

## வேலைநலன் துணை வருமானத்தைப் பெற நான் என்ன செய்யவேண்டும்?

| நீங்கள் வேலை செய்பவராக இருந்தால் | நீங்கள் சுயதொழில் புரிபவர் என்றால் |
|---|---|
| உங்களின் முதலாளி வழங்குகின்ற மசேநி சந்தாக்களின் அடிப்படையில் நீங்கள் தானாகவே மதிப்பீடு செய்யப்படுவீர்கள். நீங்கள் வேறு **எதுவும் செய்ய வேண்டியதில்லை!** | ஒரு ஆண்டில் செய்யப்படும் வேலைக்காக, **உங்கள் வருமானத்தை நீங்கள்** IRAS அல்லது CPFB-யிடம் **அறிவித்த பிறகு** மற்றும் **தேவையான மெடிசேவ் பங்களிப்புகளை வழங்கிய பிறகு** அதற்கு அடுத்த ஆண்டில் நாங்கள் உங்களை மதிப்பீடு செய்வோம். |

**வேலைநலன் துணை வருமானத் திட்டம் குறித்து மேலும் தகவலுக்கு, cpf.gov.sg/wis-ஐ பார்வையிடுங்கள்**

Workfare